**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 10.11.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மிளகாய் வற்றலுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது ,மிளகாய் வற்றலுக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

இந்தியாவில் மிக அதிகமாக பயிரிடப்படும் சுவையூட்டிகளில் மிளகாய் ஒரு முக்கியமான பயிராகும். மேலும், மிளகாய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி யில் இந்தியா ஒரு முக்கிய இடம் வகிக்கிறது . வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி ( 2022-23) மிளகாய் வற்றல் 8.52 இ லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 19.58 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆந்திரா , தெலுங்கானா, மத்தியப் பிரதேசம் , கர்நாடகா, ஒடிசா, மேற்கு வங்காளம், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகி ய மிளகாய் வற்றல் உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்கள் சேர்ந்து மொத்த மிளகாய் வற்றல் உற்பத்தியில் கிட்டத்தட்ட 93 சதவீத பங்களிப்பை வழங்குகின்றன.

இந்திய மிளகாய் வற்றல் அதன் இரண்டு முக்கிய வணிக பண்புக ளான தெளிவான நிறம் மற்றும் அதன் கார த் தன்மைகளுக்காக மிகவும் விரும்பப்படுகிறது. மேலும், மிளகாய் பச்சை மிளகாய், சிவப்பு மிளகாய் தூள் மற்றும் உலர் மிளகாய் களாகவும் பயன்படுத்தப்படுகிறது. சீனா , இலங்கை, மலேசியா, பங்களாதேஷ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகியபல்வேறு ஆசிய நாடுகளுக்கு ம், ஐக்கிய அரபு நாடுகளுக்கும் இந்திய மிளகாய் முதன்மையாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2 022-23 ஆம் ஆண்டு 0.49 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 0.22 இலட்சம் டன் உலர்/சிவப்பு மிளகாய் உற்பத்தி செய் யப்பட்டுள்ளது. முண்டு மற்றும் சன்னம் ஆகியவை தமிழ்நாட்டில் விளையும் மிளகாயின் முக்கிய இரகங்களாகும். முண்டு இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடியிலும் , சன்னம் சிவகங்கை , விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. மிளகாய் பயிரிடும் முக்கிய மாவட்டங்களில் அக்டோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் மிளகாய் விதைப்பு மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் மிளகாய் ஒற்றை பயிராக சாகுபடி செய்வது வழக்கம். எனவே , வியாபாரிகள் ஆண்டு முழுவதும் தேவையை பூர்த்தி செய்வதற்காக அறுவடை காலத்தில் தங்கள் இருப்பைக் அதிகரிக்க முனைகின்றனர்.

இந்நிலையில், கடந்த 15 ஆண்டுகளாக திருநெல்வேலி ஒழுங்குமுறை சந்தையில் சிவப்பு மிளகாய் (சன்னம்) விலையை விலை முன்கணிப்புத் திட்டம் ஆய்வு செய்துள்ளது. பகுப்பாய்வு மற்றும் வியாபாரிகள் கணக்கெடுப்பு முடிவுக ளின் படி , சன்னம் இரகத்திற்கான பண்ணை விலை அறுவடையின் போது கிலோவிற்கு ரூ. 200-210 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் அதற்கேற்ப விதைப்பு முடிவுகளை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். பருவமழை மற்றும் பிற மாநிலங்களில் இருந்து வரும் வருகையின் அடிப்படையில் விலையில் மாற்றம் இருக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் -641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரி
   நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் -641003
   தொலைபேசி : 0422-6611278


**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலை தோட்ட பயிர்கள் துறை
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் -641003
தொலை பேசி – 0422 –6611284


**மக்கள் தொடர்பு அலுவலா்**